கணக்கான ஏக்கர் நிலம், ஏரிப் புறம்போக்கு நிலம் இருக்கிற காரணத்தால் அந்த இடத்தில் ஒரு விசைத்தறிக் கூடம் அமைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலியல் முறையில் இயங்கும் விசைத்தறி இண்டஸ்ட்ரியல் அமைப்பில் பல்வேறு தொழில் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. தொழிலாளர்கள் பிரச்சினை, தொழிலாளர்கள் ஈட்டுறுதித் திட்டம் மற்றும் வருங்கால வைப்பு நிதி இவற்றையெல்லாம் செயல்படுத்த வேண்டிய சிக்கல் இருக்கிற காரணத்தால் அவைகளை ஏற்படுத்த இயலவில்லை. தொழில் பேட்டைகளை அமைக்க இயலாத நிலையில் இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்புவார்களானால் அந்த நெசவாளர்களை ஒரு கூட்டுறவுச் சங்கத்தை அமைத்து கூட்டுறவு அமைப்பின்கீழ் கொண்டு வருவார்களானால், அதற்கு இந்த அரசு ஆவன செய்யும்.

141—

புஞ்சை புளியம்பட்டி மற்றும் நம்பியூர் ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தரம் உயர்த்துதல்

*21684—திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், பவானிசாகர் தொகுதியிலுள்ள புஞ்சை புளியம்பட்டி மற்றும் நம்பியூர் ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தரம் உயர்த்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

142—

கறம்பக்குடி அரசு பொது மருத்துவமனையில் போதுமான மருத்துவர்கள் நியமித்தல்

*24253—திரு. எஸ். சண்முகநாதன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குடி தொகுதியிலுள்ள கறம்பக்குடி அரசு பொது மருத்துவமனையில் போதுமான மருத்துவர்கள் இல்லாததை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், தேவையான மருத்துவர்கள் நியமிக்கப் பட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) கறம்பக்குடி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஒப்பளிக்கப்பட்ட மருத்துவர்களின் எண்ணிக்கை இரண்டு. தற்பொழுது இரண்டு மருத்துவர்களும் பணிபுரிந்து வருகின்றனர்.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

156—

தலைவாசலில் அரசினர் மகளிர் உயர்நிலைப்பள்ளி ஏற்படுத்துதல்.

*21462—திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தலைவாசலில் அரசினர் மகளிர் உயர்நிலைப்பள்ளி ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

158—

கெலமங்கலம் பிரதம கூட்டுறவுச் சங்கத்தை இரண்டாகப் பிரித்தல்.

*20855—திரு. கே. ஏ. மனோகரன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கெலமங்கலம் பிரதம கூட்டுறவுச் சங்கம் (Kelamangalam Co-operative Marketing Society) ஓசூர் மற்றும் தேன்கனிக்கோட்டை வட்டத்தினைக் கொண்ட பெரிய சேவை நிறுவனமாக உள்ளதால் இதனை இரண்டாகப் பிரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன், கூட்டுறவு துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): இல்லை. ஆயினும், ஓசூர் வட்ட விவசாயிகளின் நலன் கருதி சூளகிரியில் ஒரு கிளை அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.